அ.வ.எண். **93/2024** வா.சா.**1 –** உமாமகேஸ்வரி **23.01.2025**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க நன்கு தெரியும். ஆங்கிலம் ஓரளவு எழுத படிக்கத் தெரியும். நான் 1986 ம் வருடத்தில் பிறந்தேன். என் பெற்றோர்களுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1983 அல்லது 1984. வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் உண்மையானது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விவரங்களும் உண்மையானவை. பூர்வீகச்சொத்தில் கிடைத்த வருமானத்தை வைத்தும், பூர்வீகச்சொத்தை விற்ற வருமானத்தை வைத்தும் வா.சா.ஆ.4 சொத்து வாங்கப்பட்டது. பூர்வீகச்சொத்தை விற்பனை செய்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு அப்போது 17 வயது. பூர்வீகச்சொத்துக்களை என் அப்பாவும், அவரது சகோதரர்களும் 2003 ம் வருடத்தில் பாகப்பிரிவினை செய்துக்கொண்டனர். அந்த பாகப்பிரிவினை 19.06.2003 ம் தேதியில் ஏற்பட்டது. 16.06.2003 ம் தேதியில் என் அப்பா வா.சா.ஆ.4 சொத்துக்களை கிரயம் வாங்கினார். வா.சா.ஆ.4 சொத்துக்கள் குறித்து, பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. பூர்வீகச்சொத்துக்களில் 3, 4 சொத்துக்களை விற்பனை செய்துதான் வா.சா.ஆ.4 கிரயச்சொத்துக்கள் நான்கைந்து தேதிகளில் கிரயம் வாங்கப்பட்டது. 20.04.1976 ல் என் அப்பா அவர் பெயரில் கிரயம் வாங்கிய சொத்தை விற்பனை செய்து, வா.சா.ஆ.4 சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது என்றால் என் அப்பா பெயரில் கிரயம் வாங்கிய சொத்து, கூட்டுக்குடும்ப சொத்து. 20.04.1976 தேதியில் என் அப்பா பெயரில் ஏற்பட்ட கிரயம் பூர்வீகச்சொத்திலிருந்து கிரயம் வாங்கியது என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சொத்துக்கள் .......

2003 ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்படவில்லை. 20.04.1976 தேதியில் கிரயம் வாங்கியபோது என் அப்பாவிற்கு திருமணம் ஆகவில்லை என்றும், அவருடைய சொந்த வருமானத்தை வைத்து கிரயம் வாங்கப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. கூட்டுக்குடும்பமாக இருந்தபோது கிரயம் வாங்கப்பட்டது. 20.04.1976 தேதியிட்ட கிரயம், என் அப்பா ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை வைத்து வியாபாரம் செய்து, கிடைத்த வருமானத்தை வைத்து, அவர் பெயரில் சொந்த வருமானத்தை வைத்து கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் முழுவதையும் வழக்குரையில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். வா.சா.ஆ.4 ல் உள்ள சர்வே எண். 306/2 ல் உள்ள ஏக்கர் 2.57 ல் 2 ஏக்கர் நீங்கலாக, 57 செண்ட் மட்டும் நான் வழக்குரையில் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு பகுதி பாகப்பிரிவினையின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரய ஆவணம் மூலம் 2 ஏக்கர் நிலத்தை நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சரிதான். வா.சா.ஆ.6 ல் உள்ள சொத்து சுய சம்பாத்திய சொத்து என்று நான் ஒப்புக்கொண்டு, என் அப்பாவிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தார் என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் வாங்கிய கடனை அடைக்க வேண்டும் என்பதற்காக என் கணவரின் பணத்தை கொடுத்து கிரயம் வாங்கினேன். என் அண்ணன் யார், யாரிடம் கடன் வாங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அண்ணன் கடன் வாங்கியிருந்த விவரத்தை என் அப்பா என்னிடம் சொன்னார். வா.சா.ஆ.6 கிரய ஆவணத்தில் கண்டுள்ள

சொத்து ராமச்சந்திரன் என்பவரின் அனுபவத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படுவது மேற்சொன்ன சொத்தை ராமச்சந்திரன் என்பவருக்கு விற்பனை செய்ததற்கான கிரய ஆவணத்தின் சான்றிட்ட புகைப்பட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1.

என் அப்பாவிற்கு விவசாயம்தான் வருமானம். அதைத்தவிர வேறு வருமானம் கிடையாது. வா.சா.ஆ.6 மற்றும் 7 அடமானக்கடன் என்ன காரணத்திற்காக என் அப்பா வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 அடமானக்கடனை நான்கு கறவை மாடுகள், 42 மேய்ச்சல் ஆடுகள் வாங்குவதற்காகவும் என் அப்பா வாங்கினார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு விவசாயத்தை தவிர, கால்நடைகள் மூலமாகவும் வருமானம் வருகிறது என்று தெரிந்தும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் என் அப்பா நீதிப்பேராணை தாக்கல் செய்தார். அதில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன்.

*1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.*

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்